**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், குடவாசல்**

2026-ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 05 -ம் நாள் வியாழக்கிழமை

**O.S. No.66/2025**

வாதி தரப்பு சாட்சியாகிய PW.2 ன் வாக்குமூலம் (1969-ம் ஆண்டின் 44-வது சட்ட ஏற்பாட்டின் படி) திரு. M. முகம்மது அர்ஷத் பரீத், B.B.A., LLB., (HONS)., மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர், குடவாசல் அவர்களால் ஆணையிட்டு உறுதி கூறப்பட்டது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | ராபின்சன் | தாலுக்கா | : | குடவாசல் |
| த/க/பெ. | : | ஏசு | கிராமம் | : | திரியம்பகபுறம் |
| | | | தொழில் | : | தனியார் ஊழியர் |
| | | | வயது | : | 42 |

**1, 2 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

எனக்கு நீதிமன்றத்திலிருந்து சாட்சி சொல்ல அழைப்பாணை ஏதும் வந்ததா என்றால் இல்லை. வழக்கு சொத்தில் தற்போது 1ம் பிரதிவாதி அருள்தாஸ் குடியிருந்து வருகிறார் என்றால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள பிரமாண வாக்குமூலத்தில் வாதி எந்த ஆண்டு வழக்கு சொத்தில் குடியிருந்து வந்தார் என்று குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். 1ம் பிரதிவாதி வழக்கு சொத்தில் 25 ஆண்டுகளாக குடியிருந்து வருகிறார் என்றால் சரியல்ல. வழக்கு சொத்தில் வாதியின் உரிமையை காட்டும் ஆவணம் ஏதும் பார்த்துள்ளேனா என்றால் அவரது தகப்பனார் பெயரில் உள்ள ஆவணத்தை பார்த்துள்ளேன். அந்த ஆவணத்தில் நான் சாட்சி கையொப்பம் செய்துள்ளேனா என்றால் இல்லை. கடந்த 21.12.2018 ல் 1, 2 பிரதிவாதிகள் வழக்கு சொத்தை வசம் எடுத்தது சம்மந்தமாக வாதி காவல் நிலையத்தில் புகார் ஏதும் கொடுத்தாரா என்றால் கொடுக்கவில்லை. வழக்கு சொத்திற்கான ஆவணங்கள் அனைத்தும் 1, 2 பிரதிவாதிகள் பெயரில் உள்ளது என்றால் சரிதான் அதனை 1,2 பிரதிவாதிகள் பெயரில் மாற்றியுள்ளார்கள். வழக்கு சொத்தின் சொத்து வரியினை 1ம் பிரதிவாதி தான் செலுத்தி வருகிறார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. வாதியும் நானும் உறவினர்கள் என்றால் சரிதான். வாதி எனது உறவினர் என்பதால் அவருக்கு ஆதரவாக சாட்சி சொல்கிறேன் என்றால் சரியல்ல.

Taken down by the typist under my dictation in open Court read over to the witness admitted and acknowledged by him to be Correct.

MOHAMED ARSHAD FAREED M

Digitally signed by MOHAMED ARSHAD FAREED M
DN: cn=MOHAMED ARSHAD FAREED M, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Date: 2026.02.05 17:53:31 +0530

District Munsif -Cum-
Judicial Magistrate,
Kodavasal.